DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | சிவசந்திரன் |
| Father's Name | சின்னராஜ் |
| Village | திருப்பத்தூர் |
| Taluk | திருப்பத்தூர் |
| Calling | டீக்கடை, விவசாயம் |
| Age | 42 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **24.09.2025**

**O.S. No.91/2017 பி.வா.சா.1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

1. இவ்வழக்கில் வாதிக்கு ஆதரவாக இ.ம.எண். 407/2017-ல் உத்தரவு வாங்கப்பட்டதற்கு எதிராக நான் தற்போது வரை எந்த ஒரு மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 04/1 சம்மந்தப்பட்ட சொத்தில் மதன் என்பவரின் பெயரில் பத்திரம் செய்யப்பட்டதா என்றால் செய்யவில்லை, ஏனென்றால் பதிவு செய்ய தாக்கல் செய்திருப்பது மறுக்கப்பட்டு விட்டது. மேற்படி நபரின் பெயரில் பதிவு செய்ய முற்பட்டபோது ஏற்க மறுத்ததால் பதிவு செய்யப்படாமல் மறுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. சர்வே எண்.16/2 சொத்து சம்மந்தமாக பதிவு செய்ய சமர்பித்த போது அதுவும் பதிவு செய்ய ஏற்க மறுத்துவிட்டார்கள் என்றால் இந்த கேள்வி வழக்கிற்கு சம்மந்தப்பட்டதல்ல என சாட்சி கூறி கேள்விக்கு பதிலளிக்கவில்லை. மேற்படி

சர்வே எண்.04/1 மற்றும் 16/2 சொத்தில் சுமார் எத்தனை தென்னை மரங்கள் இருக்கும் என்றால் சுமார் 400 பெரிய மரங்கள், 40 சிறிய மரங்கள் இருக்கும். மேற்படி 400 பெரிய மரங்களின் வயது எவ்வளவு இருக்கும் என்றால் 7 முதல் 8 வருடங்கள் இருக்கும். மேற்படி தென்னை மரங்கள் இருப்பதை நான் ஏன் பத்திரம் பதிய முற்பட்டபோது அதில் குறிப்பிடவில்லை என்றால் அந்த சமயம் அது செடியாக இருந்தது.

3. மேற்படி வழக்கு சொத்தானது வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட ஆள்வரைக்குள் வருகிறது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் அல்லாமல் திருப்பத்தூரில் சென்று பதிவு செய்ய முற்பட்டதற்கு காரணம் என்னவென்றால் அங்கு வேறு ஒரு சொத்தும் வாங்கினேன், அதன் மூலமாக 3 சொத்துக்களையும் இணைத்தேன்.

4. லோகலட்சுமி என்பவர் அவரது வளர்ப்பு மகளுக்கு கொடுத்த பவர் ஏஜெண்ட் ஆவணம் ஏன் திருப்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் பவர் கொடுத்தவர்க்கு தான் ஏன் அங்கு பதிவு செய்யப்பட்டது என்று தெரியும், எனக்கு தெரியவில்லை.

5. இந்நீதிமன்றத்தில் மஞ்சுளா என்பவர் லோகலட்சுமிக்கு எதிராக அ.வ.எண்.28/2019–ல் தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால்

தெரியாது. மேற்படி வழக்கில் என் சார்பாக அந்த வழக்கில் என்னையும் தரப்பினராக சேர்க்க கோரி இ.ம.எண்.1/2020 தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. மேற்படி வழக்கில் லோகலட்சுமி என்பவர் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை.

6. இவ்வழக்கில் வாதியை வழக்குச் சொத்திலிருந்து வெளியேற்ற என் சார்பாக வழக்கு ஏதும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை, ஏனென்றால் சொத்தில் நான் தான் சுவாதீனத்தில் இருக்கிறேன்.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

*ESHWAR VISWANATHAN*
*DISTRICT MUNSIF*
*Digitally signed by ESHWAR VISWANATHAN*

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வாணியம்பாடி.**